# 11 குழுக்களாக அல்லது வகுப்பாகப் படித்தல்

## இலக்கு

*எல்லா மட்டங்களிலும் படித்தல் பட்டறிவுகளைப் பகிர்ந்து கொள்வது கல்வி சார்ந்ததும் உணர்வுசார்ந்ததுமாகும். கூட்டாகப் படிக்கும் எழுத்துரு தம்மிடையே கருத்துகளைப் பரிமாறல் பற்றி மாணவர்கள் எண்ணிப்பார்க்கலாம். இது புதிய முன்னோக்குகளை திறந்து வைப்பதோடு விளங்கிக் கொள்வதற்கான வெவ்வேறு வழிகளையும் முன்வைக்கின்றது. பொதுவான படித்தல் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடல்களுக்கு உகந்த பல்வேறு வாய்ப்புக்களை வழங்குகின்றது. (கீழே பார்க்க)*

1ம் - 9ம் தரம்

30 - 90 மணித்துளிகள்



**கருவிகள்:**
பல்வேறு ஒரே மாதிரியான நூல்கள் அல்லது எழுத்துருக்கள்.

**மாறுபாடு:**
ஒரே தலைப்பில் அமைந்த வெவ்வேறு எழுத்துருக்கள்.

**செயல்முறை:**

1. படிப்புப் படிமுறை (சீரான செயன்முறைகளுக்கு, கீழே பார்க்க)

   மாறுபாடு 1: எல்லா மாணவர்களும் ஒரே நூலை அல்லது எழுத்துருவை வாசிப்பர். இம் மாறுபாடு பொதுப் படிப்புப பட்டறிவு அடிப்படையில் கவர்ச்சியானதாக இருப்பினும், எழுத்துரு அனைத்து தேர்ச்சி மட்டங்களுக்கும் பொருத்தமானதாக அல்லது வெவ்வேறு வயது மாணவர்கள் கலந்த வகுப்பாக இல்லாதிருந்தால் மட்டுமே பா.மொ.க வுக்குப் பொருத்தமானதாகக் கொள்ளப்படும்.

   மாறுபாடு 2: மாணவர்கள் ஒரே தலைப்பின் கீழ் அமைந்த வெவ்வேறு எழுத் துருக்களைப் படிப்பர். பொதுப் படிப்பு பட்டறிவின் அடிப்படையில், மிகப் பொருத்தமான ஆய்வுப்பொருளானது எ.கா. "நம் பிறப்பு நாட்டின் வரலாற்றிலிருந்து", "கவிதைகள்", "நம் நாட்டைப்பற்றிய உண்மைக் கதைகள்", "எமது கவிஞர் ஒருவரைப் பற்றிய வெவ்வேறு எழுத்துருக்கள்" போன்றவை உள்ளடக்கப்படும். இத்தலைப்புகளுக்கான எழுத்துருக்கள் தேர்ச்சி மட்டங்கள் அல்லது வயது அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் (எ.டு. புவியியல் பற்றிய பல்வேறு அளவான சிக்கல்களுடைய மூன்று உண்மை எழுத்துருக்கள், முதலியன). படிப்பு வகுப்பு முழுவதுமாக இடம்பெறாது, ஆனால் வயதடிப்படையிலும் தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையிலும் மூன்று குழுக்களாக இடம்பெற வேண்டும்.

2. தொடர் கலந்துரையாடல், செயற்படுத்தல்

   தெரிவு செய்யப்பட்ட மாறுபாட்டுடன், தொடர்ந்த கலந்துரையாடலானது முழு வகுப்பாக இடம்பெறும் (மாறுபாடு 1) அல்லது பொருத்தமான குழுக்களாக இடம்பெறலாம் (மாறுபாடு 2). இறுதியாக, மாறுபாடு 2 இல் விபரிக்கப்பட்டுள்ள குழுக்கள் உட்பட எல்லா மாணவர்களும் தமது படித்தல் பட்டறிவுகளை ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். பல தரப்பட்ட வயதினர் அதிகமுள்ள வகுப்புக்களில், மூத்த மாணவர்கள் எழுத்துருக்களை எவ்வாறு கையாள்கிறார்கள் தாம் படித்தவற்றை எவ்வாறு கலந்துரையாடுகின்றார்கள் என்பதை இளம் மாணவர்கள் கண்காணித்துக் கற்றுக் கொண்டு பயன்பெறுவர்.

   தொடர் கலந்துரையாடல்களின் மாறுபாடுகளும் கைகூடுகைகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குபவை: பேச்சுகள், தம்பக்க / எதிர்ப்பக்கக் கலந்துரையாடல்கள், வகிபங்கு / மேடைப்படைப்புகள், எழுதப்பட்ட ஒப்படைகள் போன்றன.

நெறிமுறை அணுகல்: படித்தல் எப்படி?

ஒரு பிள்ளை ஒரு வாக்கியத்தை அல்லது பல வாக்கியங்களை வரிசைப்படி உரத்துப் படிக்கும் பாரம்பரிய முறையானது வழக்கற்றுப்போனதும் தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். இது படிப்புத்திறனை மேம்படுத்தவோ வாசிப்பதை ஊக்குவிக்கவோ மாட்டாது. படிக்கும் வேகம், படிக்கும் முறைகள் மற்றும் படிப்புத் தகைமை ஆகியவற்றின் வேறுபாடுகள் மிக உயரியன

பின்வரும் மாறுபாடு பரிந்துரைக்கப்பட்டுள்ளது: படிப்பதற்காக மாணவர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக வேறுபடுத்துக. இவ்வாறு வேறுபடுத்தும் போது ஒரு குழுவிலுள்ள நபர்கள் ஒரே தேர்ச்சி மட்டத்தைக் கொண்டிருக்குமாறு பார்த்துக் கொள்க.

படிக்கத் தொடங்க முன் ஒவ்வொரு குழுவும் தமக்கான படிப்புத் திட்டமொன்றை உருவாக்கிக் கொள்வர். படித்த பின் மாணவர்கள் தாம் எவ்வாறு முன்னெடுத்தனர் என்பதையும் தாம் இன்றியமையாத உள்ளீடாகக் கருதுபவற்றையும் படித்தல் பதிவில் குறித்துக்கொள்வர். தொடர்ந்து வரும் பக்கங்களில் இதற்கான

I

எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.
விரைவாகப் படித்த குழுக்கள் அல்லது படித்து முடித்த குழுக்கள் கூடிய பணிகள் பெறும், அவை வருமாறு:

- ஓர் இயலை அதனை வழுவின்றிக் கையகப்படுத்தும் வரையும் வாசித்தல் பயிற்சியைச் செய்யவும். ஒரு பதிவினை உருவாக்கவும். இதனை பின்னர் உங்கள் வகுப்புத் தோழர்களுக்கு வழங்கவும்.
- தனித்தனி இயல்களைச் சுருக்கி அவற்றைப் பின்னர் எடுத்துரைப்புச் செய்யவும், எ.டு. வகிபாகம், ஒரு வரைவு அல்லது வரைபடம் என்பதின் வடிவம்.
- தலைப்புப் பற்றிய அறிவை விரிவாக்குக, கருப்பொருள் அல்லது நூலாசிரியர் பற்றி கூடிய ஆய்வு நடத்துக.

**குறிப்புகள்:**

- கருவிகளின் தேர்வில் மாணவர்களுக்குக் தெர்வுரிமை இருப்பின், படிப்புக்கான ஊக்குவிப்பு வளர்கிறது. இந்த முடிவுக்கு, மாணவர்கள் உண்மையான தேர்வினைச் செய்வதற்கு பல்வேறு எழுத்துருக்கள் அல்லது நூல்கள் இருக்கவேண்டும் (2-4 ஒவ்வொரு அகவை அல்லது தேர்ச்சி மட்டத்துக்கு).
- குழுக்களாக அல்லது வகுப்பாக படித்தலை திரும்பத் திரும்ப பயற்சி செய்வது கட்டாயமாகும், ஏனெனில் அது கட்டற்ற படித்தல் தொடர்களிலிருந்து ஒரு மாற்றாக அதன் நல்ல முழுமைப்படுத்தலாவதைக் குறிக்கின்றது (பார்க்கவும் கற்பித்தல் பரிந்துரைகள் #9ஐப் பார்க்கவும்).

## எடுத்துக்காட்டுகள், படித்தல் திட்டம், படித்தல் அட்டவணை:

இவ்வெடுத்துக்காட்டுகள் பரிந்துரைகள் மாத்திரமே, இவை மாற்றியமைக்கப்படலாம். படித்தல் திட்டத்தின் சொல்லாக பழக்கமான விளிப்பினை (முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை (டாச) க்கு எதிரான) "நீ" (னுர) யைத் தனிப்பயனாக்கலாம், இதனை தனிப்பட்டவர்கள் படித்தலுக்கு பொருத்தமாகப் பயன்படுத்தலாம்.

குழுவின் படித்தல் திட்டம்: ______________________

படித்தலைத் தொடங்க முன்னர், எவ்வளவு படித்தலைச் செய்யவுள்ளீர் மற்றும் எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை திட்டமிடல் பயனுள்ளதாகும்.

அட்டவணையிலுள்ள பதிவு:

எந்த இயல் நீர் படிக்கவுள்ளீர்? எந்த நேரம் நீர் இந்த இயலை வாசித்திருப்பீர்?

| இயல் | கால அளவு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

திகதி: ____________

ஆசிரியர் ஒப்பம்: ______________________

குழு ஒப்பம்: ______________________

குழுவின் படித்தல் பதிவு:____________________

படித்தல்களைத் தொடர்ந்து, தயவாக நீங்கள் எப்படி செயற்பட்டீர் என்பதையும் திட்டம் (படித்தல் திட்டம்) போதுமானதாக இருந்ததா என எண்ணிப்பார்க்கவும். தயவாக பின்வரும் கணிப்பீட்டை நிரப்பவும்:

நாம் எப்படி படித்தோம்

- ☐ நாம் அமைதியாகப் படித்தோம் (அவனாக / அவளாக)
- ☐ ____________________எங்களுக்காகப் படித்தார்.
- ☐ நாம் திட்டமிட்ட அளவுக்குச் சென்றோம்.
- ☐ நாம் ________ பக்கம் வரை படித்தோம்.
- ☐ நாம் வெவ்வேறு கட்டங்களில் உள்ளோம். ஆனால் எங்கள் எல்லோருக்கும்________ பக்கம் வரையான கதை தெரியும்.

நாம் என்ன படித்துள்ளோம்: ____________________

இக் கதைமாந்தர், செயல் அல்லது உண்மை குறிப்பாக எங்களைக் கவர்ந்தது.

____________________

ஏன் இந்தகதை மாந்தர், செயல், உங்களைக் கவர்ந்தன என்பதை 2-3 வாக்கியங்களில் விவரிக்குக.

____________________

____________________

____________________

எனக்கு, படித்தவற்றிலிருந்து இப் பந்திகள் மிகவும் இன்றியமையாதன:

____________________

____________________

____________________

## படித்தல் பதிவுக்கு ஓர் எடுத்துக்காட்டு (1ஆம் - 2ஆம் தரம்)

நூல் தலைப்பு: ____________________

நூலாசிரியர்: ____________________

வரைதல்:

சொற்கள்: ____________________

நான் நூலினைப் பின்வருமாறு கருதுகிறேன்

| மிக நல்லது | நல்லது | இரண்டாந்தரமானது | நல்லதல்ல |
|---|---|---|---|
| ☺☺ | ☺ | ☹ | ☹☹ |